சொல்லி, அனைத்து பணிகளும் முடிந்த நிலையிலே, சென்ற வருடம் திறக்கப்படும் என 29–6–2018 அன்று அதிகாரிகளும் தெரிவித்துச் சென்று, இன்று ஒரு வருடம் ஆகிவிட்டது. இன்னும் அந்த திரிகூடபுரம் பகுதியிலே பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்படாமல் இருப்பதால் பொதுமக்கள் எல்லாம் அந்தக் கடையைத் திறப்பதற்கு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். எனவே, அங்கு நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையில் அரசுரீதியாக ஏதாவது தேக்கம் இருந்தால், அதைப் பரிசீலித்து, எதனால் அதைத் திறக்கவில்லை என்பதை உடனடியாகக் கேட்டு, விரைவாக அந்தக் கடையைத் திறப்பதற்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தக் காலதாமதம் எதனால் வந்தது என்பதை ஆராய்ந்து, எந்தவிதமான சிரமம் இருந்தாலும் அதை மாற்றி, நிச்சயமாக வேறு ஏற்பாடு ஏதேனும் செய்து அந்தப் பகுதியிலே கடையைத் திறப்பதற்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

மின்மாற்றி

***32460—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 ஜூலை 2]

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, 26–வது வார்டு, கணபதிபுரம் மற்றும் அசோக் நகர் பகுதிகளில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, 26–வது வார்டு, கணபதிபுரம் மற்றும் அசோக் நகர் பகுதிகளில் தற்போது தெற்கு வீதி 250 கே.வி.ஏ. மின்மாற்றி வழியாக சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. அதில், இரவு நேரங்களில் load *அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் எந்த இடத்திலுமே மின்மாற்றியை வைக்க அனுமதிக்காத காரணத்தால், தற்போது வேறு இடம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அங்கே இரண்டு மின் கம்பங்கள் அமைக்கப் போவதில்லை. ஒரு கம்பம் அமைத்து,* pillar box *வைத்து மின்மாற்றி அமைத்துவிடுவோம். மின்மாற்றி தயாராக இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்பதால், அந்தப் பகுதி மக்களிடம் பேசி ஏதேனும் இடத்தை தேர்வு செய்து கொடுப்பாரேயானால், மின்மாற்றியை வைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் உண்மையிலே ஏற்புடையது. குறிப்பாக, கணபதிபுரம், அசோக் நகர், மோதிலால் நகர், செல்லியம்மன் கோயில் தெரு, ரோஜா தோட்டம்,* Professors Colony *ஆகிய பகுதிகளும், இரும்புலியூர் கிராமத்தையொட்டி இருக்கின்ற கிறித்துவக் கல்லூரி, நான் படித்த கால்டுவெல் மேல்நிலைப் பள்ளி என பல பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் எல்லாம் அங்கே இருக்கின்றன. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் அந்தப் பகுதியிலே*

இடத்தைத் தேர்வு செய்து கொடுப்பதில் ஒத்துழைப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். அதேபோல, சிட்லபாக்கம், Professors Colony, Judges Colony, வார்டு எண் 5, திருக்குறள் தெருவிற்கெல்லாம் இதுபோன்று transformer அமைப்பதற்கு இடம் தேவைப்படுகின்றது. குறிப்பாக, கிழக்கு தாம்பரம் பகுதி என்பது வளர்ந்து கொண்டிருக்கின்ற பகுதி. Air force முதற்கொண்டு அங்கே இருக்கிறது. அங்கே தொடர்ந்து மின் பற்றாக்குறை இருந்துகொண்டே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி அதைச் செய்து கொடுப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதிருக்கிற EE அலுவலகம் மற்றும் துணை மின் நிலையம்கூட நான் இடத்திற்கு ஏற்பாடு செய்து தந்ததன் காரணமாக வந்திருக்கின்றன. மேலும், மாண்புமிகு அமைச்சர் எங்கெல்லாம் இடம் வேண்டுமென்று நினைக்கிறாரோ, அதைச் சொன்னால், அங்கெல்லாம் ஏற்பாடு செய்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பகுதிக்கு Indian Air Force துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. தெற்கு வீதி மின்மாற்றியிலிருந்து வந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், இரவு நேரங்களில் மட்டும்தான் அங்கு load அதிகமாக வருகின்றது. இருந்தாலும், அரசு அதனைக் கருத்திலேகொண்டு 100 கே.வி.ஏ. புதிய மின்மாற்றி வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இடத்தைத் தேர்வு செய்தோம். பொதுவாக சென்னை நகரில் என்ன நடக்கிறது என்றால், எங்கு போனாலும், தங்கள் வீட்டிற்கு முன்பு transformer வைக்கக் கூடாது என்று யாருமே ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த முறையை மாற்றி, இப்போது ஒரே ஒரு மின் கம்பம் மட்டும் வைத்து, ஒரு Pillar box வைத்து transformer–ஐ வைக்கின்றோம். அதற்குக்கூட பொது மக்கள் ஒத்துழைக்காத காரணத்தினால், சில பகுதிகளில் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன. மக்கள் பிரதிநிதியாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்பு கொடுப்பார்களேயானால், தமிழ்நாடு மின்சார வாரியம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு பகுதிகளுக்கும் மின்மாற்றி அமைக்க வேண்டுமென்று கோரியுள்ளார். ஏற்கெனவே

2019 ஜூலை 2]

EE office *மற்றும் துணை மின் நிலையத்திற்கும் அவர்தான் இடம் பார்த்துக் கொடுத்ததாகச் சொன்னார். அதற்கு நன்றி. அதேபோல, இந்தப் பகுதியிலும் மின்மாற்றியை வைப்பதற்கு தாங்கள் இடத்தைத் தேர்வு செய்து கொடுப்பீர்களேயானால், 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. ஆகவே, நீங்கள் எப்போது இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தாலும், உடனடியாக அதிகாரிகளை தொடர்புகொள்ளச் செய்து, ஏற்பாடு செய்கின்றேன். இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், உடனடியாக அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிச்சூர் கிராமத்தில் 20 ஆயிரம் மக்கள் வசிக்கின்றார்கள். இப்போது 33 கே.வி.ஏ. மின்மாற்றி அங்கே பயன்பாட்டில் இருந்துகொண்டிருக்கின்றது. அதை 110 கே.வி.ஏ.–யாக மாற்றித் தர வேண்டுமென்றும், அதேபோன்று சிட்லபாக்கம் பகுதியிலிருக்கின்ற 33 கே.வி.ஏ. மின்மாற்றியை 110 கே.வி.ஏ.–யாக மாற்றித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். செம்பாக்கம் பகுதியிலே 110 கே.வி.ஏ. மின்மாற்றி அமைப்பதற்கான இடத்தை அரசு அதிகாரிகள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். எனது கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். தாம்பரம் தொகுதியில், தமிழக அரசுக்குச் சொந்தமான இடம், குறிப்பாக* land ceiling Act*–ன்கீழ் கையகப்படுத்தப்பட்ட இடம், அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் உள்ளிட்ட பல்வேறு இடங்கள் இருக்கின்றன. உங்களுடைய துறைக்கு மட்டுமல்ல, எந்தத் துறைக்கு வேண்டுமானாலும் இடம் இருக்கிறது. ஏற்கெனவே இதே சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன்.*

முற்பகல் 10–20

எந்தவொரு பொதுப் பணிக்கு இடம் வேண்டும் என்று சொன்னாலும் இடம் இருக்கிறது. அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எங்களிடம் தொடர்பு கொண்டால், கண்டிப்பாக அவர்களுக்கு இடத்தைத் தேர்வு செய்து கொடுப்போம். அதுபோல், மக்கள் குறை தீர்க்கின்ற நாள் என்று மின் வாரியம் முதற்கொண்டு

அனைத்து அரசுத் துறைகளிலும் நடத்துகிறார்கள். ஆனால், மக்களுக்கு அது குறித்த தகவல் சரியாகப் போய்ச் சேரவில்லை. ஒவ்வொரு பகுதியிலும் இதுகுறித்து மக்களுக்குத் தெரியும் வகையிலே மின்சார வாரியம் ஏற்பாடு செய்தால், அது மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சாலையோரங்களில் மற்றும் சாலைகளின் நடுவிலே இருக்கக்கூடிய மின் கம்பங்களை மாற்றியமைப்பதற்கு சில சட்ட விதிமுறைகள் இருக்கின்றன. அதற்கு உள்ளாட்சித் துறையில் அல்லது நெடுஞ்சாலைத் துறையில் பணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள், சுருக்கமாகக் கேட்டால்தான் நிறைய உறுப்பினர்களுக்கு நான் வாய்ப்புத் தர முடியும். எல்லோரும் கையைத் தூக்குகிறார்கள். கடைசியாக சபாநாயகர் வாய்ப்பு தரமாட்டேன் என்கிறார் என்று என்னைத்தான் கோபித்துக்கொள்கிறார்கள். அதனால், நீங்கள் என்னுடைய சூழ்நிலையைப் புரிந்து கொண்டு சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *நீங்கள் சிரித்த முகத்துடன் இருந்ததால் அதிகமாக நேரம் கொடுப்பீர்கள் என்ற எண்ணத்தில் பேசுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அதிக நேரம் கொடுப்பதில் எனக்கு சிரமம் இல்லை. மற்ற உறுப்பினர்கள் என்னை கோபித்துக்கொள்ளாமல் இருக்க வேண்டும் அல்லவா?*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொல்லியிருக்கின்றார். ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில் பொதுப் பிரச்சினைகளுக்கு எந்தவொரு இலாகாவாக இருந்தாலும், ஒத்துழைப்புத் தருவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். செம்பாக்கத்திற்குத் தேவைப்படும் 2 ஏக்கர் நிலத்தையும் நாங்கள் தேர்வு செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜூலை 2]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய முடிச்சூர் மற்றும் சிட்லபாக்கம் பகுதிகளில் 33/11* KVA *திறனுள்ள மின்மாற்றியை 110/33* KVA *மின்மாற்றியாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். ஆக, அந்தப் பகுதியினுடைய மின்பளு தேவை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் கணக்கெடுத்துதான் ஒவ்வொரு துணை மின் நிலையத்திலும் அதிகப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையிலே, காஞ்சிபுரத்தில் மட்டும் 121 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. முடிச்சூர் பகுதியிலேயும், சிட்லபாக்கம் பகுதியிலேயும் இப்பொழுது மின்பளு அதிகமாகத் தேவைப்படுகிறது என்பது உண்மைதான். அதற்காக மின்மாற்றிகளை மாற்ற வேண்டும் என்பதற்காக இடங்களைத் தேர்வு செய்கின்றபோதுதான் சென்னை நகரில் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல பல்வேறு துறைகளுக்கு சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அந்த இடத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கின்றார்கள். நான் நேற்றைய தினம் சொன்னேன், பல்வேறு துறைகளுக்கு சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அறநிலையத் துறைக்கு சொந்தமான நிலம் என்று சொன்னால், அதற்கு 200 சதவிகிதம் பணம் கட்ட வேண்டுமென்று சொல்கின்றார்கள். மின் வாரிய சட்டங்களில் அதற்கு இடமிருக்க வேண்டும். அதேபோல, நடு ரோட்டிலே இருக்கின்ற மின் கம்பங்களை எடுக்க வேண்டும் என்றால் அதற்கு இவ்வளவு சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்று நீங்கள் சொல்கின்றீர்கள், சட்டச் சிக்கல்கள் ஒன்றுமில்லை. உள்ளாட்சியிலே பணம் கட்டினால் நாங்கள் மாற்றிக் கொடுக்கின்றோம். தாம்பரம் பகுதியில், இப்பொழுது கிட்டத்தட்ட 1,230 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதை வழித்தடங்களாக மாற்றுவதற்கு டெண்டர் விடப்பட்டிருக்கின்றது. அந்தப் பணிகளுக்கான சர்வே நடந்து கொண்டிருக்கின்றது. சர்வே முடிந்தவுடன் அந்தப் பணிகள் தொடங்கப்படும். அப்பொழுது இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இன்றே எங்களுடைய அதிகாரிகளை உங்களோடு தொடர்பு கொள்ளச் சொல்கின்றேன். அந்த மின்மாற்றியை வைப்பதற்கு இடத்தைத் தேர்வு செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தட்கல் முறையில் 3 இலட்சம் ரூபாய் கட்டினால் விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதை நம்பி விவசாயிகளும் அதிகமாக பணத்தைக் கட்டியிருக்கின்றார்கள். ஆனால், அவசரமாக பணம் கட்டியிருக்கின்ற அந்த விவசாயிகளுக்கு இதுவரையிலும் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. இதுவரையில் எவ்வளவு விவசாயிகள் மின் இணைப்புக் கேட்டு விண்ணப்பித்திருக்கிறார்கள். இந்த அரசு இதுவரை எத்தனை விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கின்றது என்ற தகவலையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு விவசாயியாக இருக்கின்ற காரணத்தினால், விவசாயிகளுக்கு விரைவாக மின் இணைப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தட்கல் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இரண்டு ஆண்டுகளாக, அதாவது வருடத்திற்கு பத்தாயிரம் மின் இணைப்புகள் என்று அறிவித்து, கிட்டத்தட்ட 19 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கஜா புயல் பாதிப்பால் மின் கட்டமைப்பை முழுவதுமாக புதுப்பிக்கின்ற பணி மட்டுமே நடைபெற்ற காரணத்தினால் கடந்த ஆண்டு மட்டும் இந்தத் திட்டம் நின்றிருக்கின்றது. பழையது ஆயிரமும், இப்போது 10 ஆயிரமும் சேர்த்து கிட்டத்தட்ட 11 ஆயிரம் மின் இணைப்புகள் நிலுவையில் இருக்கின்றன. இந்த ஆண்டு அவற்றைக் கொடுத்துவிடுவோம். வருகின்ற ஆண்டும் தட்கல் திட்டம் இருக்கின்றது. ஆக, கஜா புயல் வந்த காரணத்தினால் கடந்த ஆண்டு மட்டும் ஓராண்டு காலதாமதம் ஆனது. அதிலே கட்டமைப்புப் பணிகள் அதிகமாக செய்ய வேண்டிய காரணத்தால் அப்படி காலதாமதம் ஆகிவிட்டது. 5 HP–க்கு ரூபாய் 2½ இலட்சம், 7½ HP–க்கு ரூபாய் 2¾ இலட்சம், அதேபோல 3 இலட்சம் ரூபாய் கட்டினால் 10 HP திறனுடைய மின் இணைப்பு கொடுக்கின்றோம். அதேபோல 15 HP மின் இணைப்பும்

கொடுக்கின்றோம். ஆக, பணம் கட்டியவர்கள் அத்தனை பேருக்குமே கடந்த இரண்டு ஆண்டுகளில் கொடுத்துவிட்டோம். கடந்த ஓராண்டு மட்டும் கொடுக்கவில்லை; உண்மைதான். ஆனால், இந்த ஆண்டிலிருந்து தொடங்கவிருக்கின்றோம். இந்த ஆண்டு அறிவிக்கப்போவதையும், ஏற்கெனவே அறிவித்ததையும் தொடங்கவிருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர், எதிர்க்கட்சித் தலைவருக்கு என்னுடைய வணக்கம். தஞ்சை மாவட்டத்திலே கஜா புயல் பீடித்த பின்னால் மின்சார வாரியத்திற்கு பலவிதமான பாதிப்புகள் ஏற்பட்டன. அவற்றில் பெரும்பகுதி சரி செய்யப்பட்ட நிலையில், இப்போது காப்பர் அதிகமாகக் கிடைக்கவில்லை என்பதனாலும், விலை உயர்வு ஏற்பட்ட காரணத்தாலும் மின்மாற்றிகளை புதிதாக அமைப்பதற்கும், மின்மாற்றிகளை மாற்றிக் கொடுப்பதற்கும், மின்சார வாரியத்திற்கு சிரமம் ஏற்படுகிறது. நம்முடைய தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு பகுதியைப் பொறுத்தவரையிலே மின்மாற்றிகளை அமைத்தால்தான் விவசாயம் செய்ய முடியும் என்பதுதான் இப்போதுள்ள சூழ்நிலை. ஏனென்றால், தண்ணீரும் வரவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் காப்பர் கிடைக்காததால்தான் மின்மாற்றிகளை அமைப்பதற்கு தாமதமாகிறது என்று மின்சார வாரியத்திலே சொல்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும். ஏனென்றால் தஞ்சை மாவட்டம் விவசாயத்தை நம்பியிருக்கிற டெல்டா மாவட்டம். ஆகவே, அதற்கு நீங்கள் முன்னுதாரணமாக இருந்து எங்களுக்கெல்லாம் மின்மாற்றிகளை அதிகமாக அமைத்துக் கொடுக்குமாறு நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் அருமையான கேள்வியைக் கேட்டிருக்கின்றார். கடந்த முறை இதே கேள்வியை ஓர் உறுப்பினர் கேட்கின்றபோது நான் சொன்னேன். காரணத்தைத்தான் நான் சொன்னேன். ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டிருக்கின்ற காரணத்தினால், திடீரென்று அரசால் காப்பர் வாங்க முடியவில்லை. அதனால் அந்த மின்மாற்றிகளை வழங்குவதில் கொஞ்சம் சிரமமாக இருக்கின்றது. மாற்று ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றோம் என்று சொன்னோம். அதற்கு செய்தித்தாள்களிலும், டி.வி–யிலும்கூட அரசு ஏதோ அதற்கு ஆதரவாக இருக்கிறது என்பதைப்போல தவறாக செய்திகள் வெளிவந்தன. இப்போது அதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்துவிட்டோம். இப்போது மின்மாற்றிகள் வந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியிலே முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதுமட்டுமல்ல, உங்கள் பகுதியிலே மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது. அதற்காக புதிய துணை மின் நிலையங்களை எல்லாம் அமைக்க வேண்டுமென்பதற்காக இடமெல்லாம் தேர்வு செய்து கொண்டிருக்கின்றோம். நான் நேற்றைய தினம் சொன்னதைப்போல, மற்ற பகுதிகளில் எல்லாம் இடம் வாங்கிவிடலாம். டெல்டா மாவட்டங்களில் இடம் வாங்குவது மட்டும் மிகவும் சிரமமாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதியில் மின்மாற்றிகளை உடனடியாக மாற்றுவதற்குண்டான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். Integrated Power Development Scheme–ல் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட ஏதாவது ஒரு பகுதியிலே இடம் இருக்குமென்று சொன்னால், அதை உடனடியாக. செய்து தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் தளபதியை வணங்கி, ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட புறநகர்ப் பகுதிகளாக இருக்கிற

2019 ஜூலை 2]

அய்யப்பன்தாங்கல், கோவூர், முகலிவாக்கம், கொளப்பாக்கம், துரைப்பாக்கம், இரண்டாங்கட்டளை ஆகிய பகுதிகளிலே கடந்த 2 மாதங்களாக குறைந்த மின்னழுத்தம் ஏற்பட்டு, பல பகுதிகளிலே மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். குறிப்பாக, தண்டலம் ஊராட்சியிலே இருக்கிற மணிமேடு என்ற பகுதியிலே கடந்த 10 நாட்களுக்கு முன்பாக நூற்றுக்கும் மேற்பட்ட டி.வி, ஏ.சி, பிரிட்ஜ், எல்லாம் பாழாய்ப்போய் அதை complaint –ஆகக்கூட சம்பந்தப்பட்ட மின் வாரிய அலுவலகத்திலே புகார் செய்திருக்கிறோம். அதை உடனடியாக இந்த அரசு சரி செய்து தந்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், பல ஊராட்சிகளிலே மின் கம்பிகள் தாழ்வாகச் சென்று கொண்டிருக்கின்றன. அதற்கு பலமுறை புகார்கள் தந்தும், அந்த மின் கம்பிகளைக்கூட இழுத்துக் கட்டாமல், பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிற நிலைதான் இருக்கிறது. இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, அந்த மின்கம்பிகளை எல்லாம் இழுத்துக் கட்டுவதற்கும், அதைப்போல குறைந்த மின்சாரம் இருக்கிற அந்தப் பகுதிகளை சரி செய்து தர வேண்டுமென்றும் தங்கள் மூலமாக இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் இரவு நேரங்களில் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது. காரணம், இரவு 9–00 மணி, 10–00 மணிக்கு மேல்தான் இப்போது இதுகாறும் இல்லாத அளவுக்கு சென்னையில் இந்த ஆண்டு மின் பளு அளவு அதிகரித்திருக்கின்றது. கிட்டத்தட்ட சென்னை மாநகரில் மட்டுமே 3,738 மெகா வாட் மின்சாரம் தேவை ஏற்படுகிற அளவுக்கு சென்னை வளர்ந்திருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே நாங்கள் புதிய மின்மாற்றிகளை வைக்க வேண்டுமென்று சொன்னாலும்சரி, துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, உடனடியாக இடம் கிடைக்காமல் இருக்கின்றது. அதனால்தான், மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள் பேசுகின்றபோதுகூட நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்

அவர்களும் முன்னாள் அமைச்சராக இருந்திருக்கின்றார். அதனால் அந்தப் பகுதியிலே ஏதாவது இடம் இருக்கிறது என்று தெரியப்படுத்தினால் செய்து முடிக்கின்றோம்.

முற்பகல் 10–30

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கின்றேன். பள்ளிக்கரணையில் நாங்கள் 110 கே.வி. துணை மின்நிலையம் ஒன்றை அமைத்திருக்கின்றோம். ஆனால், அதற்கான மின் பாதை வருகின்ற இடம் வனத் துறையின்கீழ் வருகின்ற காரணத்தால், மூன்று ஆண்டுகளாக துணை மின் நிலையம் அமைக்க முடியவில்லை. துணை மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. 12 towers தான் போட வேண்டும். அந்த 12 towers–ஐயும் போட முடியாமல் இருக்கிறது. Marshland ஆக இருக்கின்ற காரணத்தால், வனத் துறை அனுமதி கொடுக்க மறுத்து வருகிறது. இதுபோன்ற சிக்கல்களால்தான், சென்னை மாநகரத்தில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க தாமதமாகிறது. இருந்தாலும், எங்கெல்லாம் மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்றன என்பதைக் கண்டறிய மாதந்தோறும் ஆய்வுக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறேன். இதுபோன்று எங்கேயாவது இருந்தால், உடனடியாக அதைச் சரி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்களுக்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது குறித்து இன்றைய தினமே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மரியாதைக்குரிய அண்ணன் அவர்களுடைய அரசு, மக்களுடைய பாதுகாப்புதான் முக்கியம் என்ற வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுபோன்று மின்கம்பிகள் தாழ்வாகச் செல்கின்ற பகுதிகளை உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.